2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(1) சேலம் மாவட்டம் குமாரபாளையத்திலுள்ள எஸ். எஸ். எம். புராசசிங் யூனிட் நிறுவனத்தில். பணிபுரிந்த தொழிலாளர்கள் உண்ணாநோன்பு இருப்பது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. ஆறுமுகம் தொழிலாளர்கள் உண்ணாநோன்பு குறித்து ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். இது எவ்வாறு விதிகளின் கீழ் வருகிறது என்பதை மட்டும் சுருக்கமாகச் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, சேலம் மாவட்டம குமாரபாளையத்தில் எஸ். எஸ். எம். புராசசிங் யூனிட் என்ற தொழிற்சாலையிலே 1,200-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பன்னெடுங் காலமாகப் பணி புரிந்தும் அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்காமல் வைத்திருக்கிறார்கள். இது குறித்து தொழிலாளர்கள் பல்வேறு கோரிக்கை களை வைத்து வலியுறுத்தக்கூடிய வகையில் 3—2—1981 முதல் உண்ணா நோன்பு இருப்பதற்காக முதல் நாள் அன்றே பந்தல் போட்டார்கள். ஆனால் அந்த நிர்வாகத்தினர் ஆட்களை அனுப்பி அவர்கள் அமைத்த அந்தப் பந்தலுக்குத் தீ வைத்தார்கள். அதற்குப் பிறகு, தொடர்ந்து உண்ணா நோன்பு மேற்கொள்ளப்பட்ட நேரத்தில் 10—2—1981 அன்று சங்கத் தலைவர் திரு. பழனிசாமி என்பவரை திடீரென்று வேலையிலிருந்து நீக்கினார்கள். பிறகு 16—2—1981 அன்று இதுபற்றி சேலம் 'டெபுடி கமிஷனர் ஆப் லேபர்' அவர்கள் முன்னிலையில் நிர்வாகத்தினரும், தொழிலாளர்களும் பேச்சு வார்த்தை நடத்தினர். அதில் தொழிலாளர்களுடைய கோரிக்கைகள் ஏற்கப்பட்டன. அதற்குப் பின்னால் திடீரென்று 17—2—1981 அன்று 80 பேரை நிர்வாகம் சஸ்பெண்ட் செய்து வேலையிலிருந்து வெளியேற்றியது. 8 நாள் சம்பளத்தை எல்லாத் தொழிலாளர்களிடமிருந்தும் பிடித்தம் செய்தார்கள். 200-க்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலையில்லை என்று நோட்டீஸ் கொடுத்து வெளியே அனுப்பிவிட்டார்கள். அதற்குப் பின்னால் 6—3—1981 முதல் சட்ட பூர்வமான நோட்டீஸ் கொடுத்து இன்றைய தினம் தொழிலாளர்கள் போராடி வருகிறார்கள். ஆனால் தொழிலாளர்களுடைய நியாயமான கோரிக்கைகளை ஏற்று நிர்வாகம் பரிசீலிப்பதற்குப் பதிலாக நிர்வாகத்தினர் வெளி ஆட்களைக் கொண்டு வந்து, போலீஸ் துணை கொண்டு போராட்டத்தை முறியடிப்பதற்காக அச்சுறுத்தி வருகிறார்கள். அதே நேரத்தில் அந்தத் தொழிற்சாலையில் இருந்த கருப்புசாமி என்பவர், அந்தப் பகுதிக்கே வரக்கூடாது என்று நீதிமன்றத்திற்குச் சென்று இன்ஜங்ஷன்

போன்ற ஆர்டரை வாங்கி அவரைத் தடுத்து நிறுத்தி, தொழிலாளர்களுக்குத் தொல்லை கொடுத்து வருகிறார்கள். இதனால் தொழிலாளர்கள் பாதிக்கப் பட்டு, இன்றைய தினம் சூழ்நிலை மிகவும் மோசமாகி அந்தப் பகுதியில் பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிற காரணத்தால், அந்தத் தொழிலாளர்களுடைய பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டிய அவசியம் இருப்ப தால், தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட, மிக முக்கியம் வாய்ந்த பிரச்சினை என்ற காரணத்தாலே, இந்த அவையினுடைய மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து, இதைப்பற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

* **மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் குமாரபாளையத்தில் பல்வேறு நிறுவனங்கள் பவர்லூம், எம்ப்ராய்டரி பிராசஸ்சிங் தொழிலில் ஈடுபட்டுள்ளன. அம்மாதிரி நிறுவனங்களில் பலவற்றிற்கும், சேலம் மாவட்ட திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம், சேலம், வேலைநிறுத்த நோட்டீசுகள் அனுப்பியிருந்தது. மேற்கூறிய நிறுவனங்களில் எஸ்.எஸ்.எம். யூனிட் (குரூப்) எனக் கூறப்படும் பின்வரும் நிறுவனங்களுக்கும் வேலை நிறுத்த நோட்டீஸ் தொழிற் சங்கம் அனுப்பியது. வீனா கேலண்டரிங் மில்ஸ், எஸ். எஸ். எம். பிராசஸ்சிங் மில்ஸ் எஸ் எஸ் எம் சைனிங் சென்டர் எஸ் எஸ் எம். பிரதர்ஸ் (பி) லிட், வீனா டெக்ஸ்டைல்ஸ் (பி) லிட், புருஷோத்தம் இண்டஸ்ட்ரீஸ், லட்சுமி அம்மாள் இண்டஸ்ட்ரிஸ், வீனா இண்டஸ்ட்ரிஸ் இந்தக் குரூப் யூனிட்டில் சுமார் 684 தொழிலாளர்கள் பணி புரிகிறார்கள். சேலம் மாவட்ட திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம் தனது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிடில் 5—3—1981 முதல் வேலை நிறுத்தம் செய்வதாக அறிவித்திருந்தது. தொழிலாளர்களுடைய டைம் கார்டுகள் கொடுத்தல், ஊதிய உயர்வு, பஞ்சப்படி அதிகரிப்பு, ஹீட் அலவன்ஸ், இடைக்கால நிவாரணம், வேலை நிரந்தரம், சில தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்துவது, சீருடை, ஓய்வு விடுதி, வீட்டு வசதி, தொழிலாளர்கள் மீது விதிக்கப்பட்ட தண்டனைகளைத் திரும்பப் பெறுவது, பிடித்தம் செய்யப் பட்ட சம்பளப் பணத்தைத் திருப்பியளிப்பது போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

1981 மார்ச் 9] [திரு. எஸ். இராகவானந்தம்]

இந்தத் தொழிற் தகராறு மீது சேலம் தொழிலாளர் துறைத் துணை ஆணையர் 6—2—1981 மற்றும் 19—2—1981 தேதிகளில் பேச்சுவார்த்தைகள் நடத்தினார். இதற்கிடையில் 10—2—1981 முதல் எஸ்.எஸ்.எம். யூனிட்டில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் ஆரம்பித்தனர். 16—2—1981 அன்று நடந்த பேச்சு வார்த்தைகளில் சேலம் தொழிலாளர் துறைத் துணை ஆணையர் கொடுத்த அறிவுரைப்படி தொழிலாளர்கள் 17—2—1981 முதல் வேலைக்குத் திரும்பினர். இந்த வேலை நிறுத்தத்தைச் சட்ட விரோதமான தாகக் கருதிய நிர்வாகத்தினர் வேலை நிறுத்தம் செய்த ஒவ்வொரு தொழிலாளி யின் சம்பளத்திலும் 8 நாட்களுக்கு உண்டான சம்பளப் பணத்தைப் பிடித்தம் செய்வதாக அறிவித்துள்ளனர். 6—3—1981 முதல் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ள 52 தொழிலாளர்களுக்கு வேலை கோரியும் ஊதிய உயர்வு கோரியும் 6—3—1981 முதல் வேலை நிறுத்தம் நடைபெறுகிறது. 584 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். 104 தொழிலாளர்கள் வேலைக்குச் செல்கின்றனர். சேலம் தொழிலாளர் அலுவலர் இது சார்பாக 9—3—1981 அன்று சமரசப் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார். ஆகவே உரிய நடவடிக்கை எடுத்துள்ளதால் இதற்காக மேலவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்கவேண்டிய தேவையில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இப்பொருள் குறித்து அவையின் இதர நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்று கருதி எனது அனுமதியை மறுக்கிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

3. அறிவிப்புகள்.

(1) பேரவையிலிருந்து செய்திகள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு தனிக் குடியிருப்புப் பகுதி உடைமை உரிமைச் சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1981) ஆய்வு செய்வதற்காக 27 உறுப் பினர்கள் அடங்கிய (18 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும், 9 சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைப்பதற்கு 6—3—1981 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் நகலை அனுப்பி, மேற்படி கூட்டாய்வுக் குழுவில் பணியாற்று